செ. கு. எண்: 153 நாள்: 30.08.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.8.2018

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், சின்னதாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மகன் திரு. ராஜகுமாரன் என்பவர் 20.7.2018 அன்று மண்மங்கலம் வட்டம், மரவாபாளையம் என்ற இடத்தில் காவேரி ஆற்றின் மறுகரைக்கு கடந்து செல்ல முற்பட்ட போது, ஆற்று நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் வட்டம், தோரணக்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் திரு. சபரீஷ் என்பவர் 22.7.2018 அன்று அமராவதி ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் வட்டம், சணப்பிரட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டியராஜன் என்பவரின் மகன் திரு. கார்த்திகேயன் என்பவர் 3.8.2018 அன்று காவேரி ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், நெய்குன்னம் கிராமத்தில் 26.8.2018 அன்று, அம்மாபேட்டையைச் சேர்ந்த திரு. மகேஷ்வரன் என்பவரின் மகன் செல்வன் விவேக், திரு. சிவானந்தம் என்பவரின் மகன் செல்வன் கிருபாகரன் மற்றும் திரு. சிவானந்தம் என்பவரின் மகன் செல்வன் செல்வகுமார் ஆகிய மூன்று மாணவர்கள் வெண்ணாற்றில் குளிக்கும் போது, எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. ராஜகுமாரன், திரு. கார்த்திகேயன், திரு.சபரீஷ், மாணவர்கள் விவேக், கிருபாகரன், செல்வகுமார் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துயர சம்பவங்களில் உயிரிழந்த 6 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**